# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் frmichaelsitaram@gmail.com | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **26 மே 2019** | **பாஸ்கு காலம் - ஆறாம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |




# உள்ளத்தில் உருவாகும் உலக அமைதி

# உங்கள் சிந்தனைக்கு...

அன்பு சகோதர சகோதரிகளே உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அன்பு வாழ்த்துக்கள்! பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறுக் கொண்டாடங்களில் கலந்து இயேசுவின் அமைதியையும் அவரது துணையாளரையும் பெற்றுக் கொண்டு புது வாழ்வு பெற நாம் அனைவரும் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

வெறும் சட்ட திட்டங்களை மட்டும் மையமாகக் கொண்டதல்ல, நம் கிறிஸ்தவ வாழ்வு அன்பை அடித்தளமாகக் கொண்டிருக்க வேண்டும். மனிதருக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதன் மூலம் இறைவனின் மாட்சியையும் ஒளியையும் பெற்றுக்கொள்ள இன்றைய வாசகங்கள் எடுத்துரைக்கின்றன.

நற்செய்தி வாசகம், நம்மை உண்மையின் வழியில் நடக்கச் சொல்லி அதற்குத் துணையாய் இருப்பவர் தூய ஆவியாரே என்று எடுத்துரைக்கிறது. நானும் தந்தையைக் கேட்பேன், தந்தை மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருவார், அவர் உங்களோடு என்றும் இருப்பார் (யோவா. 14:16-17). அதே ஆவியானவர் நன்மை தீமைகளை அறிந்து கொள்ள நமக்கு கற்றுத் தருவார் என்றும், இன்றைய நற்செய்தி கூறுகிறது. தூய ஆவியானவர் நம்மை தந்தையோடு இணைக்கும் பாலம் போன்றவர். தடுமாறும் மனிதனை நிலை நிறுத்துபவர், வழி தவறிய மனிதனை புதிய பாதைக்கு அழைத்து வருபவர். தந்தையின் விருப்பத்தை நிறைவு செய்ய இயேசு தொடங்கிய பயணம், இறுதியில் தந்தையின் கரங்களில் ஆவியை ஒப்படைக்கும் வரை அவருக்கு உறுதுணையாக இருந்து ஊக்கம் தந்தவர் தூய ஆவியானவர். ஆதித்திருச்சபையில் நெருக்கடி நேரங்களில், குழப்ப காலங்களில் திருத்தூதர்களை உறுதியாகச் செயல்படச் செய்தது மட்டுமல்ல, அவர்களிடம் தோன்றிய பிரிவினைகளைத் தகர்த்து, ஒற்றுமையில் ஒருங்கிணையச் செய்தவர் தூய ஆவியானவர்.

நமது உள்ளம் கலங்க வேண்டாம்; மருள வேண்டாம். இயேசுவின் அமைதியைப் பெற்றுக்கொள்வோம். அவர் அனுப்பும் தூய ஆவியாராம் துணையாளரை ஏற்றுக் கொண்டு இவ்வுலகில் அமைதியின் தூதுவராக, ஒருங்கிணைந்துச் சாட்சிய வாழ்வு வாழ இறையருளைப் பெற வேண்டி இன்றைய திருப்பலிக் கொண்டாடங்களில் தந்தையிடம் மன்றாடுவோம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக “Church of Our Lady of Lourdes” என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் “Building Fund” என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்



ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் ஞானத்தில் வளர அனுப்பி வையுங்கள்.




## பொது விடுமுறைத் திருப்பலி நேரம்

**05-06-2019 புதன் - நோன்புப் பெருநாள் விடுமுறை**

காலை 10 மணிக்குத் தமிழ் திருப்பலி
(மதியம் 12மணி முதல் நம் ஆலய வளாகத்தின்இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும்.)
அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை

## இயேசுவின் விண்ணேற்புப் பெருவிழா (கடன் திருநாள்)

**திருப்பலி நேரங்கள்**




**29-05-2019 (புதன்):**
மாலை 6:30 மணி (ஆங்கிலம்), இரவு 8:00 மணி (தமிழ்)

**30-05-2019 (வியாழன்):**
மதியம் 12:30, மாலை 6:30, இரவு 8:00 மணி (ஆங்கிலம்)




## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 26-05-2019, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில்** இரவு 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!



## நற்கருணை ஆராதனை வழிபாடு

**02-06-2019 ஞாயிறு மாலை 5:00 மணி**

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக் கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காகவும் செபிக்கவும் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

**08-06-2019 சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**



இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | திருத்தூதர் பணி 15: 1-2, 22-29 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 67: 1-2, 4, 5, 7 |
| **பதிலுரை:** | கடவுளே! மக்களினத்தார் எல்லாரும் உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக! |
| **இரண்டாம் வாசகம்:** | திருவெளிப்பாடு 21: 10-14, 22, 23 |
| **வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா. |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 14 :23-29 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

